TNED140001902026

Presented on : 04-02-2026
Registered on : 26-02-2026
Decided on : 10-03-2026
Duration : 0 years, 1 months, 6 days

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**முன்னிலை**: திரு. J.ராஜ்குமார், B.A., LL.B.,
நீதித்துறை நடுவர் எண் 1. பவானி.

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீ விசுவாவசு வருடம் மாசி திங்கள் 26ம் நாள்
2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் செவ்வாய்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.60/2026**

மாநில அரசுக்காக
காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,
அம்மாபேட்டை காவல் நிலையம்,
அம்மாபேட்டை.
(குற்ற எண். 306/2025). ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

சிவக்குமார் (32/2025),
த.பெ.சித்தன் ... எதிரி

**Case Summary**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். | அரசுக்காக காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,<br>அம்மாபேட்டை காவல் நிலையம்,<br>அம்மாபேட்டை.<br>(குற்ற எண். 306/2025). |
| 2. | எதிரி பெயர் | சிவக்குமார் (32/2025),<br>த.பெ.சித்தன் |
| 3. | எதிரியின் முகவரி | 68, மின்தாங்கி, ஈரெட்டி, பருகூர்,<br>தாமரைகரை அஞ்சல், அந்தியூர் வட்டம்,<br>ஈரோடு மாவட்டம். |
| 4. | எதிரியின் வயது | 32 |



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:01:40 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | குற்ற நிகழ்வு நாள் | 29.11.2025 | | |
| 6. | புகார் தேதி | 02.12.2025 | | |
| 7. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி | – | | |
| 8. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | நீதிமன்ற காவலில் உள்ளார். | | |
| 9. | Commitment | N/A | | |
| 10. | பிரிவு 355BNSSன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள் | N/A | | |
| 11. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 06.03.2026 | 06.03.2026 |
| | | அ.சா.2 | 06.03.2026 | 06.03.2026 |
| | | அ.சா.3 | 06.03.2026 | 06.03.2026 |
| | | அ.சா.4 | 07.03.2026 | 07.03.2026 |
| | | அ.சா.5 | 07.03.2026 | 07.03.2026 |
| | | அ.சா.6 | 07.03.2026 | 07.03.2026 |
| | | அ.சா.7 | 07.03.2026 | 07.03.2026 |
| 12. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி | 03.03.2026 | | |
| 13. | தண்டனை அல்லது உத்தரவு | 10.03.2026 | | |
| 14 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 10.03.2026 | | |
| | காலதாமதத்திற்கான காரணம் | அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைபடுத்துவதில் காலதாமதம் | | |

இவ்வழக்கு கடந்த 26.02.2026ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – II அவர்களும், எதிரி தரப்பில் இலவச சட்ட ஆலோசகர் திரு.S.கோவிந்தன் அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களை கேட்டும்,



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.10 18:01:51 +0530

சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்**

கடந்த 29.11.2025ஆம் தேதி நள்ளிரவு 11.50 மணிக்கு அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, குருவரெட்டியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளைக்கு அருகிலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ATM Machineல் நிரப்பப்பட்டிருந்த பணம் ரூ.10 இலட்சத்தை எதிரி திருப்புலி, குத்தூசி, கட்டிங் பிளேயர் ஆகியவற்றை பயன்படுத்தி ATM Machine–ஐ நேர்மையற்ற முறையில் திறந்து, சுயலாபம் கருதி திருட முயற்சித்துள்ளார் என்றும், எனவே, எதிரி பிரிவுகள் 331(4), 305(a) உ/இ 62 BNSன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி, அம்மாபேட்டை காவல் நிலைய, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக பிரிவு 230 BNSSன் கீழ், எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால், எதிரி மீது பிரிவுகள் 331(4), 305(a) உ/இ 62 BNSன் கீழ் குற்றச்சாட்டினை வனைந்து பிரிவு 263 BNSன் படி விளக்கி கூறப்பட்டபோது, எதிரி குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு விசாரணைக்கு நெறிபடுத்தப்பட்டார்.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் 7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.7 வரையான சான்றுப்பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றவாணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.10 18:01:54 +0530

4. **அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:-**

கடந்த 29.11.2025ஆம் தேதி நள்ளிரவு 11.50 மணிக்கு அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, குருவரெட்டியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளைக்கு அருகிலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ATM Machineல் நிரப்பப்பட்டிருந்த பணம் ரூ.10 இலட்சத்தை எதிரி திருப்புலி, குத்தூசி, கட்டிங் பிளேயர் ஆகியவற்றை பயன்படுத்தி ATM Machine-ஐ நேர்மையற்ற முறையில் திறந்து, சுயலாபம் கருதி திருட முயற்சித்துள்ளார்.

4.2 அ.சா.7 சண்முகம் சிறப்பு உதவி ஆய்வாளர், கடந்த 02.12.2025ம் தேதியன்று இரவு 19.00 மணிக்கு நிலைய தலைமை காவலர் ராமச்சந்திரன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது குருவரெட்டியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளை மேலாளர் அசோக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான அ.சா.ஆ.1 புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண்.306/2025, சட்டப்பிரிவுகள் 331(4), 305(a), r/w 62 BNS கீழ் அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற தான் சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான ராஜேந்திரன் மற்றும் பெருமாள் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜரும், அ.சா.ஆ.8 மாதிரி வரைபடமும் தயார் செய்தும், பின்னர் சாட்சிகள் அசோக்குமார், ராஜவேல், பிரசாத், ராஜேந்திரன் மற்றும் பெருமாள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4.3 கடந்த 09.12.2025 தேதியன்று நிலைய சிறப்பு உதவியாளர் அ.சா.7 சண்முகம் என்பவர் அ.சா.6 ராஜகுரு தலைமை காவலர், நிலைய தலைமை காவலர் அ.சா.5 பூபதி ராஜ்குமார் என்பவரையும் அழைத்துக் கொண்டு குருவரெட்டியூர் சந்தை அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அந்த வழியாக நடந்து வந்த ஆஜர் எதிரியை விசாரித்தபோது அவர் முதலில் தனது பெயர் மற்றும் முகவரியை மாறி மாறி கூறியவரை மீண்டும் விசாரித்தபோது அவர் தான் குருவரெட்டியூர், ஐஓபி வங்கி ஏடிஎம் மிஷினில் பணம் திருடியதாக குற்றத்தை ஒப்புக்கொண்டவரை மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.10 18:01:58 +0530

எதிரியை நாளை காலையில் விசாரணைக்காக நிலையம் வருமாறு கூறி கூறியும், ஆனால் எதிரி அதற்கு மறுத்துவிட்டதாகவும், பின்னர் தனது பெயர் சிவக்குமார் என்றும் தனது முகவரியையும் எதிரி கூறியதாகவும், அப்போதே கைதுக்கான காரணம் கூறி சிறப்பு உதவியாளர் எதிரியை கைது செய்தும், பின்னர் எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தும், பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் தானும், தன்னுடன் வந்த தலைமை காவலரும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்தும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.6ன் சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4.4 பின்னர், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியை சோதனை செய்தபோது அவர் தனது அண்டர் டிராயரில் மறைத்து வைத்திருந்த பச்சைப்புடி அ.சா.பொ.1 திருப்புளி ஒன்று, அ.சா.பொ.2 சிவப்பு புடி கட்டிங் பிளேயர் ஒன்று, அ.சா.பொ.3 கருப்பு புடியுடன் கூடிய குத்தூசி ஒன்று மற்றும் தான் அணிந்திருந்த ஒரு ஜோடி அ.சா.பொ.4 கருப்பு மோல்டிங் செருப்பையும் எடுத்து ஆஜர் செய்ததை சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியும், தானும் தன்னுடன் வந்த காவலரும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பின்னர் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி தங்களை அழைத்துச் சென்ற கரடிப்பட்டியூரில் உள்ள சுப்பிரமணியம் வீட்டிற்கு அருகில் இருந்து அ.சா.பொ.5 லுங்கி ஒன்று மற்றும் அ.சா.பொ.6 ஆரஞ்சு மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட துண்டு ஒன்று மற்றும் அ.சா.பொ.7 கருப்பு கலர் சட்டை ஒன்று ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி தாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தும், பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் வந்துள்ளார்.

4.5 பின்னர், அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி அழைத்துச் சென்று அடையாளம் காட்டிய கரடிப்பட்டி ஊரில் உள்ள சுப்பிரமணி என்பவரின் கிழங்கு நிலத்தின் அருகில் உள்ள 6வது வீடு அருகில் மறைத்து மேற்படி லுங்கி, துண்டு, சட்டை



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:02:00 +0530

ஆகியவற்றை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியும், பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்துக்கள் மற்றும் கைது செய்த எதிரியுடன் நிலையம் வந்து எதிரிக்கு திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்கவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும், கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

4.6 திருப்புளி, குத்தூசி, கட்டிங் பிளேயர் மற்றும் செப்பல் ஒரு ஜோடி கைப்பற்றியதற்கான படிவம் 91 அ.சா.ஆ.9 ஆகவும், லுங்கி, துண்டு, சட்டை ஒன்றினையும் கைப்பற்றியதற்கான படிவம் 91 அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான "கரடிப்பட்டியில் சுப்பிரமணி என்பவரின் கிழங்கு களத்தின் அருகில் உள்ள 6வது வீட்டில் தங்கி உள்ள வீட்டையும் தங்களுக்கு அடையாளம் காட்டுகிறேன், மேலும் "நான் கடந்த 29.11.2025 தேதி ஏடிஎம் மிஷினில் பணம் திருட வந்தபோது நான் அணிந்திருந்த கருப்பு கலர் கட்டம் போட்ட லுங்கி, ஆரஞ்சு மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட துண்டு ஒன்று VIJAY TAILORS M.NAGAR b-10 என்ற லேபிளுடன் கூடிய கருப்பு கலர் அரைக்கை சட்டை ஆசிவற்றை தங்களிடம் ஆஜர் செய்கிறேன்" என்பது மட்டும் அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து கடந்த 10.01.2026ம் தேதியன்று எதிரி மீது சட்டப் பிரிவுகள் 331(4), 305(a), r/w 62 BNS கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரியை குற்றத்தோடு இணைவுபடுத்தும் சங்கதிகளை தொகுத்து பிரிவு 351(1)(b) BNSSன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சி என்று கூறினார். இந்த வழக்கு பற்றி பொதுவாக கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்று கூறினார். எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது இல்லை என்று கூறினார்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:02:14 +0530

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 331(4), 305(a) உ/இ 62 BNS ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

7. **<u>தீர்வு</u>**

அரசு தரப்பில் ஆஜரான அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை –2 தன்னுடைய வாதுரையில் கடந்த 29.11.2025ஆம் தேதி நள்ளிரவு 11.50 மணிக்கு அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, குருவரெட்டியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளைக்கு அருகிலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ATM Machineல் நிரப்பப்பட்டிருந்த பணம் ரூ.10 இலட்சத்தை எதிரி திருப்புலி, குத்தூசி, கட்டிங் பிளேயர் ஆகியவற்றை பயன்படுத்தி ATM Machine–ஐ நேர்மையற்ற முறையில் திறந்து, சுயலாபம் கருதி திருட முயற்சித்துள்ளார் என தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பபட்டுள்ளது எனவும், ஆகவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டுமென வாதம் புரிந்தார்.

8. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் தனது வாதுரையில் ஆஜர் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், எதிரி ATM Machineல் இருந்து பணத்தை எடுக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றும், எதிரி மீது பொய் வழக்கு கொடுத்துள்ளார் என்றும், அரசு தரப்பில் சூழ்நிலை சாட்சியம் மற்றும் நேரடி சாட்சிகள் மூலம் இந்த வழக்கை நிரூபிக்கவில்லை என எதிரியை விடுதலை செய்யவேண்டுமென வாதம் புரிந்தார்.

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:02:17 +0530

**Sec. 331(4), 305(a), r/w 62 BNS**

Relates to lurking house-trespass or house-breaking, specifically when done after sunset and before sunrise (night-time). imprisonment for 10 years imprisonment and a fine.

Addresses theft in a dwelling house, tent, or vessel used for human dwelling or custody of property, imprisonment for 7 years and fine.

Pertains to the punishment for attempting to commit offenses punishable with imprisonment.

10. இந்த வழக்கில் அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளவாறு வழக்கு சம்பவம் அதாவது அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, குருவரெட்டியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளைக்கு அருகிலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ATM Machineல் நிரப்பப்பட்டிருந்த பணம் ரூ.10 இலட்சத்தை எதிரி திருப்புலி, குத்தூசி, கட்டிங் பிளேயர் ஆகியவற்றை பயன்படுத்தி ATM Machine–ஐ நேர்மையற்ற முறையில் திறக்க முயற்சித்துள்ளார் என்பதனை அ.சா.1 முதல் 7 வரையிலான சாட்சியங்கள் மற்றும் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

11. இவ்வழக்கில் திருடுபோனதாக சொல்லப்பட்டுள்ள தேதி 29.11.2025 புகார்மனுவானது 02.12.2025 அன்று கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் அ.சா.1ன் சாட்சியத்தை பரிசீலித்து பார்க்கும் போது சம்பவமானது 29.11.2025 அன்று நடைபெற்றுள்ளதை அறியமுடிகிறது. இவ்வழக்கில் எதிரி குருவரெட்டியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளைக்கு அருகிலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ATM Machineல் நிரப்பப்பட்டிருந்த பணம் ரூ.10 இலட்சத்தை நேர்மையற்ற முறையில் திறக்க முயற்சித்துள்ளாரா என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாகும்.

12. மேற்படி பிரிவுகளின்படி பரிசீலனை செய்கையில், எதிரி நேர்மையற்ற முறையில் ATM Machineல் திறக்க முயற்சி செய்தாரா என்பதை நேரடி அல்லது சூழ்நிலை



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.10 18:02:08 +0530

சாட்சியங்கள் மூலம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யலாம். இந்த வழக்கில் அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரியை CCTV பதிவுகள் மூலம் பார்த்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால், மேற்படி CCTV பதிவுகள் இந்த வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரியை போன்று உருவம் மற்றும் அமைப்பு இருந்ததாகத்தான் சாட்சியம் அளித்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

13. சூழ்நிலை சாட்சியங்கள் மூலம் அரசு தரப்பில் எதிரி தான் ATM Machineயை திருட முயற்சி செய்தாரா என்பதை பரிசீலனை செய்கையில், அரசு தரப்பில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அ.சா.5 மற்றும் அ.சா.6 முன்னிலைபடுத்தப்பட்டனர். குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களின் சொல்லும் தன்மை குறித்து காண பாரதிய சாட்சிய அதிநியம் 2023 பிரிவுகள் 22 மற்றும் 23யை காண வேண்டும். பாரதிய சாட்சிய அதிநியம் 2023 பிரிவு 23 காவல் துறையினரின் கட்டுப்பாட்டில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாலும், காவல் துறையினரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாலும் அது எதிரிக்கு எதிராக பயன்படுத்த இயலாது என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டமாகும். மேலும், அந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரியாகவோ அல்லது இந்த வழக்கு சம்பந்தமான காவலராகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. எந்தவொரு காவல் அதிகாரியிடமும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாலும் பிரிவு 22ன் கீழ் தடை செய்யப்பட்டதாகும்.

14. ஆனால் பிரிவு 23ன் படி ஏதேனும் சங்கதி அல்லது தகவல் காவல்துறையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது புதிதாக தெரியவந்தால் அது ஒப்புதல் வாக்குமூலமாக இருந்தாலும் அதனை எதிரிக்கு எதிராக நீருபிக்க இயலும் பயன்படுத்தலாம். இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் இருவரும் காவல் துறையை சார்ந்த அதிகாரிகள் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அவர்களது சாட்சியத்தில் அ.சா.5 பூபதி ராஜ்குமார் தலைமை காவலர் தனது சாட்சியத்தில், கடந்த 09.12.2025 தேதியன்று நிலையை சிறப்பு உதவியாளர் சண்முகம் என்பவர் தன்னையும், நிலைய காவலர் ராஜகுரு



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.10 18:02:10 +0530

என்பவரையும் அழைத்துக் கொண்டு குருவரெட்டியூர் சந்தை அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அந்த வழியாக நடந்து வந்த ஆஜர் எதிரியை விசாரித்தபோது அவர் முதலில் தனது பெயர் மற்றும் முகவரியை மாறி மாறி கூறிய பின்னர், விசாரித்தபோது, அவர் தான் குருவரெட்டியூர், ஐஓபி வங்கி ஏடிஎம் மிஷினில் பணம் திருடியதாக குற்றத்தை ஒப்புக்கொண்ட பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரியை நாளை காலையில் விசாரணைக்காக நிலையம் வருமாறு கூறி கூறியும், ஆனால் எதிரி அதற்கு மறுத்துவிட்டார் என்றும், பின்னர் தனது பெயர் மற்றும் முகவரியையும் எதிரி கூறி சாட்சியமளித்துள்ளார்.

15. அ.சா.5 பூபதி ராஜ்குமார் தலைமை காவலர் தனது சாட்சியத்தில், கடந்த 09.12.2025 தேதியன்று நிலையை சிறப்பு உதவியாளர் சண்முகம் என்பவர் தன்னையும், நிலைய காவலர் ராஜகுரு என்பவரையும் அழைத்துக் கொண்டு குருவரெட்டியூர் சந்தை அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அந்த வழியாக நடந்து வந்த ஆஜர் எதிரியை விசாரித்தபோது அவர் முதலில் தனது பெயர் மற்றும் முகவரியை மாறி மாறி கூறிய பின்னர், விசாரித்தபோது, அவர் தான் குருவரெட்டியூர், ஐஓபி வங்கி ஏடிஎம் மிஷினில் பணம் திருடியதாக குற்றத்தை ஒப்புக்கொண்ட பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரியை நாளை காலையில் விசாரணைக்காக நிலையம் வருமாறு கூறி கூறியும், ஆனால் எதிரி அதற்கு மறுத்துவிட்டார் என்றும், பின்னர் தனது பெயர் மற்றும் முகவரியை கூறியும், பின்னர், கைதுக்கான காரணம் கூறி சிறப்பு உதவியாளர் எதிரியை கைது செய்தும், பின்னர், எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தும், பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் தானும், தன்னுடன் வந்த காவலரும் அ.சா.ஆ.3 ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்தததாகவும்,

16. மேலும், அ.சா.5 தனது சாட்சியத்தில், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியை சோதனை செய்தபோது அவர் தனது அண்டர் டிராயரில் மறைத்து வைத்திருந்த பச்சைப்புடி திருப்புளி ஒன்று, சிவப்பு புடி கட்டிங் பிளேயர் ஒன்று, கருப்பு புடியுடன் கூடிய



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:02:27 +0530

குத்தூசி ஒன்று ஆகியவற்றையும், தான் அணிந்திருந்த ஒரு ஜோடி கருப்பு மோல்டிங் செருப்பையும் எடுத்து ஆஜர் செய்ததை சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியும், தானும் தன்னுடன் வந்த காவலரும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், தற்போது நீதிமன்றத்தில் உள்ள திருப்புளி, கட்டிங் பிளேயர் மற்றும் குத்தூசியை தான் அன்றைய தினம் எதிரி எடுத்து ஆஜர் செய்தும், பின்னர் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி தங்களை அழைத்துச் சென்ற கரடிப்பட்டியூரில் உள்ள சுப்பிரமணியம் வீட்டிற்கு அருகில் இருந்து நீல நிற கட்டம் போட்ட லுங்கி ஒன்று மற்றும் ஆரஞ்சு மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட துண்டு ஒன்று மற்றும் கருப்பு கலர் சட்டை ஒன்று ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் தானும், தன்னுடன் வந்த காவலரும் சாட்சி கையொப்பம் செய்தும், லுங்கி அ.சா.பொ.5 ஆவும், துண்டு அ.சா.பொ.6 ஆகவும், சட்டை அ.சா.பொ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டும், பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் வந்தும், பின்னர் தன்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

17. அ.சா.6 ராஜகுரு தலைமை காவலர் தனது சாட்சியத்தில், கடந்த 09.12.2025 தேதியன்று நிலையை சிறப்பு உதவியாளர் சண்முகம் என்பவர் தன்னையும், நிலைய தலைமை காவலர் பூபதி ராஜ்குமார் என்பவரையும் அழைத்துக் கொண்டு குருவரெட்டியூர் சந்தை அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அந்த வழியாக நடந்து வந்த ஆஜர் எதிரியை விசாரித்தபோது அவர் முதலில் தனது பெயர் மற்றும் முகவரியை மாறி மாறி கூறியவரை மீண்டும் விசாரித்தபோது அவர் தான் குருவரெட்டியூர், ஐஓபி வங்கி ஏடிஎம் மிஷினில் பணம் திருடியதாக குற்றத்தை ஒப்புக்கொண்ட பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரியை நாளை காலையில் விசாரணைக்காக நிலையம் வருமாறு கூறி கூறியும், ஆனால் எதிரி அதற்கு மறுத்துவிட்டதாகவும், பின்னர் தனது பெயர் சிவக்குமார் என்றும் தனது முகவரியையும் எதிரி கூறியதாகவும், அப்போதே கைதுக்கான



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:02:29 +0530

காரணம் கூறி சிறப்பு உதவியாளர் எதிரியை கைது செய்தும், எதிரியை கைது செய்த விபரத்தை அவரது அண்ணனுக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். பின்னர் எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் தானும், தன்னுடன் வந்த தலைமை காவலரும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்தும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியை சோதனை செய்தபோது அவர் தனது அண்டர் டிராயரில் மறைத்து வைத்திருந்த மேற்படி பொருட்களை எடுத்து ஆஜர் செய்ததை சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாக சாட்சியமளித்துள்ளார்.

18. மேலும், அ.சா.6 தனது சாட்சியத்தில், தானும் தன்னுடன் வந்த காவலரும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தும், தற்போது தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், பின்னர் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி தங்களை அழைத்துச் சென்ற கரடிப்பட்டியூரில் உள்ள சுப்பிரமணியம் வீட்டிற்கு அருகில் இருந்து நீல நிற கட்டம் போட்ட லுங்கி ஒன்று மற்றும் ஆரஞ்சு மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட துண்டு ஒன்று மற்றும் கருப்பு கலர் சட்டை ஒன்று ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் தானும், தன்னுடன் வந்த காவலரும் சாட்சி கையொப்பம் செய்தும், தற்போது தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

19. அ.சா.7 தனது சாட்சியத்தில், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதியான "கரடிப்பட்டியில் சுப்பிரமணி என்பவரின் கிழங்கு களத்தின் அருகில் உள்ள 6வது வீட்டில் தங்கி உள்ள வீட்டையும் தங்களுக்கு அடையாளம் காட்டுகிறேன், மேலும் நான் கடந்த 29.11.2025 தேதி ஏடிஎம் மிஷினில் பணம் திருட வந்தபோது நான் அணிந்திருந்த கருப்பு கலர் கட்டம் போட்ட லுங்கி, ஆரஞ்சு மற்றும் வெள்ளை நிற கட்டம்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.10 18:02:33 +0530

போட்ட துண்டு ஒன்று VIJAY TAILORS M.NAGAR b–10 என்ற லேபிளுடன் கூடிய கருப்பு கலர் அரைக்கை சட்டை ஆசிவற்றை தங்களிடம் ஆஜர் செய்கிறேன்" என்பது மட்டும் அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

20. மேலும், பிரிவு 23ன் கீழ் புதிதாக தெரியவருவதால் மேற்படி அ.சா.5 மற்றும் அ.சா.6 சாட்சியங்கள் எந்தவொரு பிரிவிலும் செல்லாது என்பது எந்தவொரு சட்டப் பிரிவும் சொல்லவில்லை. மேலும், எதிரி தரப்பில் ஒப்புதல் வாக்குமூலமானது வலுக்கட்டாயமாகவோ, பயமுறுத்தியோ, தகாத செல்வாக்கை பயன்படுத்தியோ ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக எந்தவொரு குறுக்கு விசாரணையும் செய்யவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. ஒரு ஒப்புதல் வாக்குமூலமானது தனக்கு எதிராக பயன்படுத்தினால் அந்த ஒப்புதல் வாக்குமூலமானது வலுக்கட்டாயத்தால் பெறப்பட்டால் அது இந்திய அரசியலமைப்பு உறுப்பு 20(3)ன் கீழ் தடைசெய்யப்பட்டதாகும். ஆனால், இந்த வழக்கின் ஒப்புதல் வாக்குமூலம் வலுக்கட்டாயத்தில் பெறப்பட்டதாக எந்தவொரு சாட்சியமும் குறுக்கு விசாரணையும் எதிரி தரப்பில் செய்யவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எனவே, இந்திய அரசியலமைப்பு உறுப்பு 20(3)ன் கீழ் இது தடைசெய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

21. மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிரவீன்குமார் எதிர் கர்நாடகா மாநிலம் என்கிற **வழக்கில்** Sec.27 does not lay down that the statement made to a Police Officer should always be in the presence of independent witnesses. Normally in cases where the evidence led by the prosecution as to a fact depends solely on the Police witnesses, the Courts seek corroboration as a matter of caution and not as a matter of rule. Thus it is only a rule of prudence which makes the Court to seek corroboration from independent source, in such cases while assessing the evidence of Police. But in cases where the Court is satisfied that the evidence of the Police can be independently relied upon then in such cases there is no prohibition in law that the same cannot be accepted without independent corroboration. In the instant case nothing is brought on record to show why evidence of P.W.33 I.O. made by the accused as per Ex.P-35. Therefore,



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:02:35 +0530

the argument that statement of the appellant as per Ex.P-35 should be rejected because the same is not made in the presence of independent witness has to be rejected.

22. மேலும், எதிரிக்கு எதிரான குற்றச்சார்த்து வினவியபோது, எதிரி "என்னை மனித்து விடுங்கள் நான் செய்தது தவறு" என விளக்கமளித்தார். மேற்படி விளக்கமானது சாட்சியமாக எடுத்துக்கொள்ள முடியாது என்றாலும், மேற்படி விளக்கமானது இந்த வழக்கை உறுதியூட்டும் விதமாகவே அமைந்துள்ளது.

23. முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டு மறுநாள் இந்நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என வாதிடப்பட்டது. மேற்படி வாதத்தினை பரிசிலிக்கையில், 02.12.2025ம் தேதி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 03.12.2025ம் தேதியன்று மறுநாள் இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேற்படி காலதாமதத்தால், அரசுத்தரப்பு சாட்சிகள் உறுதியானதாக இருந்தால் மேற்படி காலதாமதம் வழக்கை பாதிக்காது. வழக்கில் எதிரிக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

24. மேலும் மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் Sarwan Singh and others VS State of Punjab என்கிற வழக்கில் " delay in dispatch of First Information report to magistrate is not a Circumstance which Can throw out the prosecution case in its entirely என்று கூறியுள்ளது.

25. பாரதிய சாட்சிய அதிநியம் பிரிவு (j)ல் நிரூபித்தல் (Proved) என்பதை ஒரு பொருண்மை மெய்ப்பிக்கப்பட்டது என்று எப்போது சொல்லப்படுகிறது என்றால், ஒரு நீதிமன்றம் தனக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா விஷயங்களையும் கவனத்தில்கொண்டபின் அந்தப் பொருண்மை இருப்பதாக நம்பி அல்லது அது இருப்பதற்கு வாய்ப்பு உண்டு என்று கருதி ஒரு விவேகமுள்ள மனிதன் அந்த வழக்கின் சூழ்நிலையில், அந்த பொருண்மை இருப்பதாக யூகித்து செயல்படக்கூடிய நிலை இருந்தால் அந்த பொருண்மை மெய்ப்பிக்கப் பட்டதாகச் சொல்லப்படும் என்று கூறுகிறது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:02:39 +0530

மேற்படி சாதாரண விவேகமுள்ள மனிதனின் நிலையிலிருந்து இந்த வழக்கில் முன்னிடப்பட்டுள்ள விஷயங்கள் (matters) பரிசிலித்து வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

26. எதிரிக்கு பிரிவு 271(2) BNSSன் கீழ் வழங்கவிருக்கும் தண்டனை குறித்து வினவப்பட்டது. அவர் பின்வருமாறு பதில் அளித்தார்.

"என் மீது வேறு எந்த வழக்கும் இல்லை. நான் டிரைவர் வேலை செய்து வருகிறேன். இனிமேல் தவறு செய்ய மாட்டேன், இந்த ஒரு முறை என்னை மன்னித்து விடுங்கள். சிறையில் இருந்த நாட்களை வைத்து முடித்துக் கொடுங்கள்." (ஒப்பம்) சிவகுமார்.

27. எதிரியின் பதிலை இந்நீதிமன்றம் கருத்திற்கொண்டு, **முடிவாக** எதிரி மீதான பிரிவு 331(4), 305(a) உ/இ 62 BNS ன் கீழான குற்றச்சாட்டுக்களானது பிரிவு 271(2) BNSSன் படி அரசு தரப்பில் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்து, எதிரிக்கு **பிரிவு 331(4)BNSன் படி 92 நாட்கள்** கடுங்காவல் சிறை தண்டனையும், **ரூ.100/– அபராதம்** விதித்தும், கட்டத் தவறினால் ஒரு வாரம் மெய்காவல் சிறைதண்டனை விதித்தும், **பிரிவு** 305(a) உ/இ 62 **BNSன் 92 நாட்கள்** கடுங்காவல் சிறை தண்டனையும், **ரூ.100/– அபராதம்** விதித்தும், கட்டத் தவறினால் ஒரு வாரம் மெய்காவல் சிறைதண்டனை விதித்தும், தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி தண்டனைகளை **ஏககாலத்தில் (concurrently)அனுபவிக்க** உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராத தொகை ரூ.200/–

28. எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களான 09.12.2025 முதல் இன்று வரை உள்ள 92 நாட்களை எதிரிக்கு வழங்கப்பட்ட தண்டனை காலத்திலிருந்து கழித்துக்கொள்ள **பிரிவு 468 BNSSன் கீழ்** உத்தரவிடப்படுகிறது.

29. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள, P.R.No.13/2026ல் கண்டுள்ள வழக்குச் சொத்துக்களான அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.4 முறையே பச்சை கலர் கைப்பிடி உள்ள



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:02:41 +0530

திருப்புலி, கருப்பு கலர் கைப்பிடி உள்ள குத்தூசி, சிவப்பு கலர் கைப்பிடி உள்ள கட்டிங் பிளேயர், கருப்பு கலர் மோல்டிங் செப்பல் – 1 ஜோடி மற்றும் அ.சா.பொ.5 முதல் அ.சா.பொ.7 முறையே லுங்கி, துண்டு, சட்டை ஆகியவற்றை மேல்முறையீட்டு காலம் எதுவும் இருப்பின் அது முடிந்த பின்னர் அழிக்க தலைமை எழுத்தருக்கு உத்தரவிடப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:02:45 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
பவானி.

**இணைப்பு:**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.அசோக்குமார். |
| அ.சா.2 | திரு.ராஜவேல் பிரசாத் . |
| அ.சா.3 | திரு.ராஜேந்திரன். |
| அ.சா.4 | திரு.பெருமாள். |
| அ.சா.5 | திரு.பூபதி ராஜ்குமார், தலைமை காவலர். |
| அ.சா.6 | திரு.ராஜகுரு, தலைமை காவலர். |
| அ.சா.7 | திரு.சண்முகம், சிறப்பு உதவி ஆய்வாளர். |

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 02.12.2025 | புகார் மனு. |
| அ.சா.ஆ.2 | 03.12.2025 | பார்வை மகஜர். |
| அ.சா.ஆ.3 | 09.12.2025 | எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.5ன் சாட்சி கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.4 | 09.12.2025 | கைப்பற்றுதல் மகஜர் (திருப்புலி, குத்தூசி, கட்டிங் பிளேயர், செருப்பு). |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 | 09.12.2025 | கைப்பற்றுதல் மகஜர் (துண்டு, லுங்கி, சட்டை). |
| அ.சா.ஆ.6 | 09.12.2025 | எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.6ன் சாட்சி கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.7 | 09.12.2025 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.8 | 03.12.2025 | மாதிரி வரைபடம். |
| அ.சா.ஆ.9 | 09.12.2025 | படிவம் 91 (திருப்புலி, குத்தூசி, கட்டிங் பிளேயர், செருப்பு). |
| அ.சா.ஆ.10 | 09.12.2025 | படிவம் 91 (துண்டு, லுங்கி, சட்டை). |
| அ.சா.ஆ.11 | 09.12.2025 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி. |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள்:** –

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | திருப்புலி. |
| அ.சா.பொ.2 | குத்தூசி. |
| அ.சா.பொ.3 | கட்டிங் பிளேயர். |
| அ.சா.பொ.4 | மோல்டிங் செப்பல் – 1 ஜோடி. |
| அ.சா.பொ.5 | லுங்கி. |
| அ.சா.பொ.6 | துண்டு. |
| அ.சா.பொ.7 | சட்டை. |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:–** – இல்லை –

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:02:50 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
பவானி.

**குறிப்பு:**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து எதிரிக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. எதிரி அபராத தொகை ரூ.200/– செலுத்திவிட்டார்.